


25.11. 2024

தலைப்புச் செய்திகள்

- மணிப்பூர் வன்முறை சம்பவம் உள்ளிட்ட பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இருஅவைகளும் நாள் முழுமைக்கும் இன்று ஒத்திவைக்கப்பட்டன.
- சர்வதேச கூட்டுறவு மாநாட்டை புதுதில்லி பாரத் மண்டபத்தில் பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று பிற்பகல் தொடங்கி வைக்கிறார்.
- தமிழக சட்டப்பேரவை அடுத்தமாதம் 9-ம் தேதி கூடுகிறது
- டெல்டா மாவட்டங்களில் கனமழை எச்சரிக்கையை அடுத்து முன்னேற்பாட்டு பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு.KKSSR ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.
- பெர்த் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 295 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா - ஆஸ்திரேலியாவை அபாரமாக வென்றுள்ளது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

நாடாளுமன்ற கூட்டத்தொடர்

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்று தொடங்கிய நிலையில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக இரு அவைகளும் நாள் முழுமைக்கும் இன்று ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று கூடியதும், மணிப்பூர் வன்முறை உள்ளிட்ட பிரச்சனைகளை எழுப்பி எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் அவை முதலில் நண்பகல் வரையிலும், பின்னர் நாள்முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் இதே நிலைமை எதிரொலித்ததால் அவை முதலில் நண்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது

மீண்டும் அவை கூடியபோது அவையை சுமூகமாக செயல்பட உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று அவைத்தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் வலியுறுத்தினார்.

ஆனால் உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபடவே அவை நாள்முழுமைக்கும் ஒத்திவைக்கப் பட்டது.

முன்னதாக மாநிலங்களவையில் மறைந்த முன்னாள் உறுப்பினர்களுக்கும், மக்களவையில் அண்மையில் காலமான இரு உறுப்பினர்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖

கூட்டத்தொடர் தொடர்ச்சி

அவை தொடங்குவதற்கு முன்னர் நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் திரு. நரேந்திரமோடி இக்குளிர்கால கூட்டத்தொடர் ஆரோக்கியமான விவாதங்களுடன் ஆக்கப்பூர்வமாக அமையும் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

அரசியல் சாசனத்தின் 75-வது ஆண்டு தினம் நாளை கொண்டாடப்படும் நிலையில் இக்கூட்டத்தொடர் முக்கியத்துவம் பெறுவதாகவும் அவர் எடுத்துரைத்தார்

இத்தினம் ஜனநாயகத்தின் சிறப்பை பறைசாற்றுவதாக அமைவதாக பிரதமர் பெருமிதம் வெளியிட்டுள்ளார்.

நம்நாட்டின் பெருமையையும், மதிப்பையும் நிலைநாட்டும் வகையில் நாடாளுமன்ற செயல்பாடுகள் அமையவேண்டும் என்று எடுத்துரைத்த பிரதமர், ஜனநாயகத்தின் மாண்பு, உரிய விதத்தில் நாடாளுமன்றத்திலிருந்து, வாக்காளர்களை சென்றடைய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

ஜனநாயகம் மற்றும் அரசியல் சாசனத்தின் மீது நம்பிக்கையையும், அர்ப்பணிப்பையும் ஏற்படுத்தும் வகையில் நாடாளுமன்ற செயல்பாடுகள் இருக்க வேண்டும் என்றும் பிரதமர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

ஓம்பிர்லா

வக்ஃப் வாரிய திருத்த மசோதா தொடர்பாக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற கூட்டுக்குழுவை சேர்ந்த எதிர்கட்சி உறுப்பினர்கள், மக்களவை தலைவர் திரு. ஓம்பிர்லாவை அவரது அலுவலகத்தில் இன்று சந்தித்து பேசினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இக்குழுவை சேர்ந்த திரிணமுல் காங்கிரஸ் உறுப்பினர் திரு. கல்யாண் பானர்ஜி, எதிர்கட்சி உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு, நாடாளுமன்ற கூட்டுக்குழு தலைவர் செவி சாய்ப்பதில்லை என்று மக்களவை தலைவரிடம் எடுத்துரைக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மக்களவை தலைவர் உறுதியளித்ததோடு, அறிக்கை சமர்ப்பிப்பதற்கான காலஅவகாசம் நீட்டிக்கப்படும் என்று கூறியதாகவும் திரு. கல்யாண் பானர்ஜி குறிப்பிட்டார்

❖❖❖❖❖❖❖❖❖

சர்வதேச கூட்டுறவு மாநாடு

பிரதமர் திரு. நரேந்திரமோடி சர்வதேச கூட்டுறவு மாநாட்டை புதுதில்லி பாரத் மண்டபத்தில் இன்று பிற்பகல் தொடங்கி வைக்கிறார்.

“கூட்டுறவு அனைவருக்கும் செழிப்பை உருவாக்குகிறது” என்பதை கருப்பொருளாக கொண்டு நடைபெறும் இந்த 6 நாள் மாநாடு அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி, சமூக சமத்துவம் ஆகியவற்றை நோக்கமாக கொண்டு நடைபெறுகிறது.

மத்திய கூட்டுறவுதுறை அமைச்சர் திரு. அமித்ஷா பங்கேற்கும் இம்மாநாட்டில் பூட்டான் பிரதமர் ஷெரிங் டோப்கே, ஃபிஜி நாட்டின் துணை பிரதமர் மனோவா காமிகாமிக்கா உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖

கூட்டுறவு - அமித்ஷா

இந்நிலையில் கூட்டுறவு இயக்கத்தில் இந்தியா முன்னோடி நாடாக உருவெடுத்துள்ளது என்று அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

ஊடக கட்டுரை ஒன்றில் இதனை தெரிவித்துள்ள அமைச்சர், தனிநபர் பொருளாதார வளர்ச்சியை செறிவூட்டுவதோடு, அவர்களை பொருளாதார பாதையில் இணைக்க இத்துறை வகை செய்வதாக குறிப்பிட்டார்.

நாட்டின் கூட்டுறவுத்துறைகள் தன்னிறைவை எட்டி வலுவடைவதை நோக்கமாக கொண்டு கூட்டுறவுத்துறையை முன்னேற்றப்பாதையில் வளப்படுத்துவோம் என்ற பிரதரின் தாரக மந்திரம் அமைந்துள்ளதாக கூறினார்.

முதலீடுகளும், சேமிப்புகளும் இல்லாதோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வலிமைமிகு கருவியாக கூட்டுறவுத்துறை திகழ்கிறது என்றார்.

சர்வதேச கூட்டுறவு அமைப்பின் உலகளாவிய மாநாடு இன்று இந்தியாவில் தொடங்கப்படுவதன் மூலம் நிதி உள்ளடக்கம், வறுமை ஒழிப்பு, பாலின சமத்துவம், நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை எட்ட வகைசெய்யும் என்றார்.

பின்தங்கிய மக்கள், விளிம்பு நிலை பிரிவினர், ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறியஅவர், கூட்டுறவுத்துறைக்கு புத்துயிர் அளிக்கும் வகையில 60 நடைமுறைகள் செயல்படுத்தப்படுவதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர் அரசியல் சாசனம்

இந்திய அரசியலமைப்பு சாசன தினம் கொண்டாடப்படுவதை ஒட்டி நாடாளுமன்றத்தில் நாளை சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நாளையொட்டி நாடாளுமன்ற மையமண்டபத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப்தன்கர், பிரதமர் திரு. நரேந்திரமோடி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் குடியரசு தலைவருடன் இணைந்து உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் இந்திய மக்கள் அரசியல் சாசன முகப்புரையை வாசிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய அரசியல் சாசன தினத்தையொட்டி நினைவு நாணயம், தபால்தலை ஆகியவை வெளியிடப்படுவதோடு 2 புத்தகங்களும் வெளியிடப்படவுள்ளன.

1949-ஆம் ஆண்டு, நவம்பர் 26-ம் தேதி அரசியல் சாசனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே இத்தினத்தையொட்டி புதுதில்லியில் இன்று தொடங்கிய பாதயாத்திரையில் அமைச்சர்கள் திரு. பியூஷ்கோயல், டாக்டர் மன்சுக் மாண்டவியா, திரு. கிரண் ரிஜுஜு, திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்

நாட்டு நலப்பணித்திட்டம், தேசிய மாணவர் படை, சாரண சாரணியர் இயக்கம், நேரு யுவகேந்திரா, எனது பாரதம் அமைப்பை சேர்ந்த தன்னார்வலர்கள் மற்றும் மாணாக்கர் இதில் கலந்துகொண்டனர்.

❖❖❖❖❖❖❖❖❖

அன்பூர்ணா தேவி

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பு தினம் இன்று கடைப்பிடிக்கப்படுகிறது

இந்நாளையொட்டி தேசிய இயக்கத்தை மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சர் திருமதி. அன்பூர்ணா தேவி புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

இந்த இயக்கத்தில் பொதுமக்கள் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரையும் இணைக்கும வகையில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

❖❖❖❖❖❖❖❖❖

கிரிராஜ் சிங்

நாட்டிலுள்ள மேலும் பல்வேறு பொருட்களுக்கு புவிசார் குறியீடு வழங்குவதற்கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ்சிங் தெரிவித்துள்ளார்

புதுதில்லியில் இதுசார்ந்த நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றியஅவர், புவிசார் குறியீடு வழங்க ஏதுவான பொருட்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

புவிசார் குறியீடு அளிக்கப்படுவதால் சந்தை வாய்ப்புகள் அதிகரிக்கும் என்று எடுத்துரைத்த அவர், வருவாய் பெருக்கத்திற்கு இக்குறியீடு ஒரு முக்கிய கருவியாகும் என்றார்.

நம்நாட்டில் சிறப்பும், பெருமையும் வாய்ந்த பொருட்களின் அடையாளத்தை உலக சந்தைக்கு கொண்டுசெல்வதற்கான நடைமுறைகளை அரசு மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

தமிழக சட்டப்பேரவை

தமிழ்நாடு சட்டப்பேரவை அடுத்தமாதம் 9-ம் தேதி கூடுகிறது

தமிழக சட்டப்பேரவை தலைவர் திரு. அப்பாவு சென்னையில் இன்று இதற்கான அறிவிப்பை இன்று வெளியிட்டார்

இக்கூட்டத்தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து அலுவல் ஆய்வுக்குழு கூடி முடிவெடுக்கும் என்றும் அவர் கூறினார்

கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த அவர், பேரவை நிகழ்வுகள் முழுமையாக நேரலை செய்வது குறித்து படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖

வானிலை

தென்கிழக்கு வங்ககடல் பகுதியில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக இன்று வலுப்பெற்றுள்ளது

நாகையிலிருந்து தென்கிழக்கே 880 கிலோமீட்டர் தொலைவிலும்

சென்னையிலிருந்து தெற்கு தென்கிழக்கே ஆயிரத்து 50 மீட்டர் தொலைவிலும் தற்போது இது நிலைகொண்டுள்ளது.

அடுத்த 24 மணிநேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று அடுத்த 2 நாட்களில் வடமேற்கு திசையில் தமிழகம் இலங்கை கடற்கரையை நோக்கி நகரக்கூடும் என்றும் இம்மையம் தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சை, நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை, மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தென் தமிழக கடலோர பகுதிகள் மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் வரும் 29-ம் தேதிவரை இதற்குட்பட்ட பகுதிகளுக்கு செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழகத்தில் பருவமழையை எதிர்கொள்ள அரசு தயாராக உள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அறிவுறுத்தப் பட்டுள்ளதாக கூறினார்.

முன்னதாக சென்னை கண்ணகி நகரில், விழுதுகள் ஒருங்கிணைந்த சேவை மையத்ததை திறந்துவைத்த முதலமைச்சர் அங்குள்ள மழலையர் பள்ளியில் சீரமைக்கப்பட்ட வகுப்பறைகளை பார்வையிட்டதோடு, குழந்தைகளின் அடிப்படை வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

KKSSR ராமச்சந்திரன்

டெல்டா மாவட்டங்களில் கனமழை எச்சரிக்கையை அடுத்து அங்கு பொதுமக்கள் பாதிக்கப்படாத வகையில் முன்னேற்பாட்டு பணிகள் தயார் நிலையில் இருப்பதாக மாநில வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. KKSSR ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

விருதுநகரில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், மழை பாதிப்புகள் குறித்த விவரங்கள் அரசின் நேரடி பார்வையில் கண்காணிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

ராமநாதபுரம் வாய்ஸ்

தென் மேற்கு வங்ககடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக ராமநாதபுரம் மாவட்டத்தில் மறு அறிவிப்பு வரும் வரை மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவேண்டாம் என்று மீன்வளத்துறை அறிவுறுத்தியுள்ளது.

இது குறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

நாகை வாய்ஸ்

கனமழை எச்சரிக்கையை அடுத்து தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 9 துறைமுகங்களில் ஒன்றாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

நாகையில் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது குறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

உதயநிதி ஸ்டாலின் - வாய்ஸ்

தமிழகத்தின் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டும் என்பதே அரசின் குறிக்கோள் என்று துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டத்தில் விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை இன்று வழங்கி பேசிய அவர், இதுவரை 30 மாவட்டங்களில் இந்த விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டு உள்ளதாக கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நடப்பாண்டு சம்பா நெற்பயிர் காப்பீட்டிற்கான காலவரம்பு வரும் 30-ம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதால் காப்பீடு செய்யாத

விவசாயிகள் பயிர்காப்பீடு செய்து பயன்பெற வேண்டுமென ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்ட பழைய மற்றும் புதிய பேருந்து நிலையங்களிலிருந்து பயணிகளுக்கு சிரமம் ஏற்படாத வகையில் அரசு மற்றும் தனியார் பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வணிகர்கள் இன்று கடையடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சென்னை நங்கநல்லூரில் உள்ள மெட்ரோ ரயில் நிலையம் O.T.A நங்கநல்லூர் சாலை மெட்ரோ ரயில் நிலையம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்ட விழா இன்று கொண்டாடப்பட்டது.

இதற்கான அரசாணையை தமிழகஅரசு அண்மையில் வெளியிடப்பட்டது.

திருவாரூர் மாவட்டத்தில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் கல்வி, திருமணம் மற்றும் மருத்துவ உதவித்தொகை பெற தகுதிவாய்ந்தோர் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவ திருமதி. சாருஸ்ரீ தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

பெர்த்தில் பார்டர் கவாஸ்கர் கோப்பை முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 295 ரன்கள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவை வென்றது.

முன்னதாக 534 என்ற வெற்றி இலக்குடன் தனது இரண்டாவது இன்னிங்சை இன்று தொடர்ந்த ஆஸ்திரேலியா 238 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

ஸ்கோர் :

முதல் இன்னிங்ஸ் இந்தியா 150.

ஆஸ்திரேலியா 104.

2-வது இன்னிங்ஸ் இந்தியா 6 விக்கெட் இழப்பிற்கு 487 ரன் டிக்ளேர்.

8 விக்கெட் வீழ்த்திய இந்திய அணி தலைவர் பும்ரா ஆட்டநாயகனாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.